வனம் இந்தியா பவுண்டேஷன்
பல்லடம்

# வனம் செய்தி மடல்






## அனைவருக்கும் பசுமை வணக்கம்.

ஒரு விழாவை பசுமையாக என்றும் நினைவில் வைத்திருக்க, ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் நட்டு வனத்தை உருவாக்குவது பொருத்தமான செயல். பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவரும், நமது வனம் அமைப்பின் புரவலருமான ஐயா டாக்டர் S.V.பாலசுப்பிரமணியம் அவர்களது சதாபிஷேக விழாவை முன்னிட்டு, 2,000 மரக்கன்றுகள் நட்டு அடிகளார் வனம் உருவாக்கியுள்ளது வனம் அமைப்பு. இதற்கான விழா, மயிலேறிபாளையம் ஸ்ரீ பகவான் மகாவீர் கோசாலையில் 04.02.2020 அன்று நடைபெற்றது. வனம் செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் தவம் இயற்றி, வரவேற்புரை வழங்கினார். வனம் அமைப்பின் பெருநிறுவனத் தொடர்பு இயக்குநர் திரு. சேதுராமலிங்கம் அறிமுகவுரை வழங்கினார். கோசாலை நிர்வாகிகளுக்கு வனம் அமைப்பினர் மரியாதை செய்தனர். திரு.கிரன்ராஜ்ஜி பாகிரிசா அவர்கள் தலைமையுரை வழங்கினார். ஐயா டாக்டர் ஷி.க்ஷி.பாலசுப்பிரமணியம் அவர்களின் புதல்வர் திரு.முரளி அவர்கள் சிறப்புரை வழங்கினார். இதைத் தொடர்ந்து அனைவரும் மரக்கன்றுகள் நடவு செய்தனர். கோசாலையிலுள்ள மாடுகளுக்கு பழம் ஊட்டினர். மேலும் காமதேனு பூஜை செய்து வழிபட்டனர். பின்னர் வனம் அமைப்பினர் அனைவரும் சென்று ஐயா டாக்டர் S.V.பாலசுப்பிரமணியம் அவர்களை சந்தித்து வாழ்த்து கூறி ஆசி பெற்றனர்.

**நிர்வாக அறங்காவலர்கள்,**
**வனம் இந்தியா பவுண்டேஷன், பல்லடம்.**

# வனம் நிகழ்வுகள்



**ந**மது வனம் அமைப்பின் நிர்வாகிகள் 19.01.2020 அன்று கரூர் சக்தி கோச் உரிமையாளர் திரு. நடராஜன் அவர்களை சந்தித்து, வனம் விளம்பர வாகனம் குறித்து ஆலோசனை நடத்தினர்.



**எ**ன்.டி.சி குழும நிறுவனர் திரு. சந்திரமோகன் அவர்களின் மிக கடுமையான முயற்சியிலும், அதிக பொருட்செலவிலும் கட்டி எழுப்பப்பட்ட அக்கரைபட்டி தென் ஷீரடி சாய்பாபா திருக்கோயில் யாக பூஜை மற்றும் கும்பாபிஷேகம் 19.01.2020 மற்றும் 20.01.2020 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த இறைப்பணியில் நமது வனம் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**வ**னம் வாராந்திர கலந்தாய்வுக் கூட்டம் 21.01.2020 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வித்யவிகாசினி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தாளாளர் திரு. வி.தர்மலிங்கம் அவர்கள் பங்கேற்றார். வனம் அமைப்பின் தலைவர் வரவேற்புரை வழங்கினார். திட்டப்பணிகள் குறித்த அனுபவங்கள் மற்றும் ஆலோசனைகளை அனைவரும் பகிர்ந்தனர். அன்னபாலி வழங்கிய வடுகபாளையம் திரு.சத்யமூர்த்தி அவர்களை வாழ்த்தி கூட்டம் நிறைவுற்றது.





**இ**யற்கையைக் காக்கும் அறப்பணியில் தன்னை அர்ப்பணித்து துரிதமாக இயங்கிவரும் வனம் அமைப்பின் செயல் தலைவர் திரு. கே.பாலசுப்ரமணியம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, 22.01.2020 அன்று வனம் அமைப்பின் சார்பில் நமது வனாலயத்தில் அரச மரக்கன்று நட்டு மகிழ்ந்தனர்.



**பு**திதாகப் பொறுப்பேற்றுள்ள செம்மிபாளையம் பஞ்சாயத்துத் தலைவர் திரு. புண்ணியமூர்த்தி அவர்களை, நமது வனம் அமைப்பின் அறங்காவலர் திரு. RMP.ஞானசுந்தரவடிவேல் மற்றும் மரங்காவலர் திரு. பழ.சக்திவேல் ஆகியோர் சந்தித்து மரியாதை செய்தனர். வனம் அமைப்பின் செயல்பாடுகள் குறித்து விளக்கி, ஆண்டு அறிக்கையை வழங்கினர்.






**தி**ரு. GBK.ராவ் அவர்கள் 2,500 ஏக்கர் பரப்பில் ஹைதராபாத்தில் உருவாக்கியுள்ள பிரகதி ரிசார்ட்டுக்கு ஜனவரி 21 முதல் 23 வரை வனம் செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் மற்றும் செயல் தலைவர் திரு. கே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் பசுமைப்பயணம் சென்றனர். அங்கு அமைக்கப்பட்டுள்ள 3.3 மில்லியன் மரங்கள் கொண்ட பசுமை வனத்தைப் பார்வையிட்டனர்.

**வ**னாலயத்தில் குடியரசு தினம் 26.01.2020 அன்று கொண்டாடப்பட்டது. ஓய்வுபெற்ற நாசா விண்வெளி ஆய்வு மைய ஆராய்ச்சியாளர் திரு. ராக்கியப்பன் சின்னப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று தேசியக் கொடி ஏற்றி, மகாத்மா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். வனம் கௌரவ தலைவர் திரு. நாச்சிமுத்து அவர்கள், சிறப்பு விருந்தினருக்கு வனம் அமைப்பின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.





**க**லங்கல் கிராமத்தில் வனம் மரக்கன்று நட்டிருக்கும் பகுதியில் வனப்பொங்கல் மற்றும் களப்பணி 26.01.2020 அன்று நடைபெற்றது. வனத்தில் உள்ள வன விநாயகர் மற்றும் அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டன. இந்நிகழ்வில் களப் பணியாளர்கள், ஊர் மக்கள், வனம் உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மரங்களால் கிராமங்களை வளர்க்கும் வனம்!




**மா**தந்தோறும் வனம் இந்தியா பவுண்டேஷன், 'வான்மழை கருத்தரங்கை' நடத்தி வருகிறது. 50 நிகழ்வுகள் கடந்தாலும், தொடர்ந்து புதுப்புது ஆளுமைகளுடன் கற்றலும் கற்பித்தலுமாக நிகழ்வு தொடர்கிறது. 31.01.2020 அன்று நடைபெற்ற 51வது வான்மழை கருத்தரங்கிற்கு சென்னை சவீதா பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் என்.எம்.வீரய்யன் அவர்கள் தலைமை தாங்கினார். மேட்டுப்பாளையம் அரசு வனக்கல்லூரியின் முதல்வர் முனைவர் கே.டி.பார்த்திபன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று செயல் அனுபவ உரை வழங்கினார். ராசிபுரம் செல்வி ஃபீட்ஸ் நிறுவனர் திரு. கை.கந்தசாமி அவர்கள் 'கிராமப் பொருளாதாரம்' எனும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்.

### இவர்களின் உரைகளிலிருந்து...

### டாக்டர் என்.எம்.வீரய்யன்

'பல்லடம் என்பது ஒரு வறண்ட பூமி. இங்கு விவசாயமும் செய்யமுடியாது, பிற தொழிற்சாலைகளும் நடத்த முடியாது' என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். வனம் அமைப்பின் வனாலயத்தை சுற்றிப் பார்த்தபோது, நான் நினைத்தது தவறு என்று புரிந்தது. இன்னும் பத்து வருடங்களில் மற்ற இடங்களுக்கு பல்லடம் ஒரு முன்னுதாரணமாகத் திகழும்.


டாக்டர் என்.எம்.வீரய்யன்


முனைவர் கே.டி.பார்த்திபன்


திரு. கை.கந்தசாமி

சுமார் 200 ஏக்கர் அளவு கொண்டது எங்கள் பல்கலைக்கழகம். சுமார் 10 ஆயிரம் மரங்களை நட்டு வைத்திருக்கிறோம். இரண்டு மாதங்களுக்கு முன்பு 2,500 மரக்கன்றுகளை ஒரே நாளில் வைத்தோம். சென்ற வருடம் செப்டம்பர் மாதம் நண்பர் ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். அந்த நேரத்தில் மழை பெய்து கொண்டிருந்தது. 'சென்னையின் எல்லாப் பகுதிகளிலும் மழை பெய்துகொண்டிருக்கிறது' என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் அவர் என்னிடம், ''உங்கள் கல்லூரியிலிருந்து கிட்டத்தட்ட அரை கிலோ மீட்டர் அளவில் மட்டும்தான் மழை பெய்கிறது. மற்ற பகுதிகளில் மழையில்லை. நீங்கள் அதிகமாக மரங்கள் வைத்திருக்கிறீர்கள். அதனால் இங்கு மட்டும் மழைப் பொழிவு இருக்கிறது'' என்று பெருமையாகக் கூறினார். 'மரங்கள் அதிகம் இருக்கும் இடங்களில் மழைப் பொழிவும் அதிகமாக இருக்கும்' என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதை அன்றுதான் நேரடியாக அறிந்து கொண்டேன்.

அதனால் இன்னும் உற்சாகமாகி பல மரக்கன்றுகளை நடுகிறோம். எங்கள் கல்லூரிக்கு வரும் சிறப்பு விருந்தினர்களுக்கு மரக்கன்றுகளைத்தான் அன்பளிப்பாக வழங்குவோம். ''இந்த மரக்கன்றை நாங்கள் இருக்கும் பகுதியில் வளர்க்க வாய்ப்பில்லை. என்ன செய்வது?'' என சிலர் எங்களிடம் கேட்பார்கள். அவர்கள் கையாலேயே அந்த மரத்தை எங்கள் வளாகத்தில் நட்டு, அதை அவர்கள் பெயரில் வளர்க்கிறோம். மாணவர்களின் ஒத்துழைப்பு இருந்ததால்தான், எங்களால் இவ்வளவு மரக்கன்றுகளை நட்டு வளர்க்க முடிந்தது. அதே போல் வனம் அமைப்புக்கும் மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். இந்த ஒற்றுமை இன்னும் பல காரியங்களை செய்ய வைக்கும். வனம் அமைப்பின் அறங்காவலர்கள், மரங்காவலர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

### முனைவர் கே.டி.பார்த்திபன்

வனம் என்றாலே முன்பு சிங்கம், புலி, யானை, வீரப்பன் என்றுதான் நமக்குத் தெரியும். ஆனால், இன்று எல்லாரும் தண்ணீர், காற்று, மலை, மண், வளம் என்று கூறி வருகிறோம். வனங்களை பாதுகாத்தால்தான் வேளாண்மையைப் பாதுகாக்க முடியும். அதனால்தான் 1952ம் ஆண்டு இந்திய வனக்கொள்கை கொண்டு வரப்பட்டது. இதன் நோக்கம் என்னவென்றால், இந்தியாவின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனங்களாக இருக்க வேண்டும்.

விவசாயிகளிடம் போய் மரங்களை வளர்க்கச் சொன்னால், 'வருவாய் இல்லாமல் எப்படி வளர்க்க முடியும்?' என்று கேட்பார்கள். 1850களில் ஆங்கிலேயர் இந்தியாவைப் பார்த்து வியந்தார்கள். தென்னிந்தியாவின் தேக்கு மரங்கள், மத்திய இந்தியாவில் வளரக் கூடிய தோதகத்தி மரங்கள், வட இந்தியாவில் வளரும் தேவதாரு மரங்கள் ஆகியவற்றைப் பார்த்து அசந்து போனதாக வரலாற்றுக் குறிப்பு உள்ளது. ஆங்கிலேயர்கள் கப்பல்களில் போய்தான் மற்ற நாடுகளை அடிமைப்படுத்தினார்கள். அந்த கப்பல்களைச் செய்வதற்கு ஒக் மரத்தைப் பயன்படுத்துவர். இந்த மரம் முதிர்வதற்கு 150 ஆண்டுகள் ஆகும். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தேக்கு மரங்களைப் பார்த்து, அதன்பின் கப்பல்களை தேக்கு மரத்தில் செய்யத் தொடங்கினர். தேக்கின் பயன் அறிந்து அனைத்து நாடுகளுக்கும் அவர்கள் ஏற்றுமதி செய்தனர். அப்படிப்பட்ட தேக்கு மரங்கள் இன்று நம் பயன்பாட்டிற்கு இல்லாமல் போய்விட்டது. இதுபோல் ஒவ்வொரு காலகட்டத்திலும் மரங்கள் குறைந்து வருகின்றன.

இன்று ஹோட்டலில் பயன்படுத்தும் பல்குத்தும் குச்சியில் தொடங்கி, முகம் துடைக்கும் டிஷ்யூ பேப்பரை வரை மரம் இருக்கிறது. நாம் உடுத்தும் உடையில் மரம் கலக்கப்படுகிறது. குழந்தைகள் பயன்படுத்தும் நோட்டு, புத்தகம், பென்சில் என அனைத்தும் மரத்தால் ஆனவை. அனைத்திற்கும் நாம் வெளிநாடுகளில் இருந்து மரத்தை இறக்குமதி செய்கிறோம். விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாதவாறு லாபகரமாக மரங்களை நட வேண்டும். தேவையான மரங்களை வெட்ட வேண்டும். வெட்டிய மரங்களுக்கு ஈடாக மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும்.

மரத்திலிருந்து எத்தனால் எடுக்கப்படுகிறது. இந்தியாதான் இதில் இரண்டாம் இடம் வகிக்கிறது. வேப்ப மரம், இலுப்பை மரம், புன்னை மரம் ஆகியவை எண்ணெய் வித்து மரங்கள். காலத்தின் கட்டாயம் கருதி, எண்ணெய் வித்து மரங்கள் நடப்படுகின்றன. இப்போது செம்மரங்கள் அதிகம் நடப்படுகின்றன. ஆனால், அதன் பயன் குறைவு. உலகத்தின் தேவையே அதிகபட்சம் ஆண்டுக்கு 6 டன் மட்டும்தான். செம்மரங்களை அதிகம் பயன்படுத்துவோர் சீன மக்கள். அவர்கள் வாஸ்து அடிப்படையில் இதைப் பயன்படுத்துகின்றனர்.

மரம் நடுவது ஒரு குடும்பத்திற்கு மட்டுமே நன்மை தருவது அல்ல, அது சுற்றுச்சூழலுக்கே நன்மை அளிக்கிறது. இப்போது 'வீட்டுக்கொரு மரம் நடுங்கள்' என்றால், 'வீடு கொடுங்கள், மரம் நடுகிறோம்' என்கிறார்கள். அதனால்தான், 'வீட்டுக்கொரு மரம் நடுங்கள்' என்று கூறுவதை விட்டுவிட்டு 'ஆளுக்கொரு மரம் நடுங்கள்' என்கிறேன்.

அமேசான் காடுகளுக்கு ஒருமுறை சென்றோம். அந்த ஊர் மக்கள், அங்கிருக்கும் மரம் ஒன்றில் தண்ணீர் பாட்டிலை சொருகினர். ஒரு மணி நேரத்தில்



பாட்டிலில் தண்ணீர் நிறைந்தது. அதைக் குடித்தால் நோயே வராது என்கின்றனர். அமெரிக்காவில் ஒருவர் பல் துலக்க வேப்பங்குச்சியை அனுப்புமாறு கேட்கிறார். ஆனால் நாம், 'பல் குத்தாத மிருதுவான பிரஷ் வேண்டும்' என்கிறோம். அந்தக் காலத்தில் வேப்ப மரத்தடியில் கட்டில் போட்டு நிம்மதியாகத் தூங்கினோம். இன்று ஏ.சி.யில் படுத்தும் தூக்கமில்லாமல் புரள்கிறோம். மரங்களின் பயனை அறிந்துகொண்டால், வாழ்க்கை சுகமாகும்.

இன்று பலரும் 'என்ன மரம் நடுகிறோம்' என்பதை அறிந்துகொள்ளாமல் நடுகிறார்கள். மண்ணுக்கேற்ற மரங்களை, அவை முறையாக வளரும் விதத்தில் நட வேண்டும். வனம் அமைப்பு திட்டமிட்டு மரங்களை நடுகிறது. குறுமரங்கள், நெட்டை மரங்கள், இடைப்பட்ட மரங்கள் என்று மரங்களைப் பிரித்து வளர்க்க வேண்டும். அப்படி வளர்க்கும்போது, பல்வேறு பயன்களைத் தரும் மரங்களை அதிக அளவில் நட முடியும். மரங்கள் லாபம் தரக்கூடியவை. கிராமப் பொருளாதாரத்திற்கு உறுதுணையாக இருக்கும். எனவே பல்பயன் கொண்ட மரங்களை அதிகம் நட்டு, நாட்டுக்கு வளம் சேர்ப்போம்.

### திரு. கை.கந்தசாமி

எங்கள் ராசிபுரத்துக்கும் பல்லடத்திற்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இரண்டுமே வறட்சியான பகுதிகள். இரு பகுதிகளிலும் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தபோது, விவசாயத்துக்கு மாற்று வழியாக கோழிப்பண்ணையைத் தொடங்கினோம். 'கிராமப் பொருளாதாரத்தில் கோழிப்பண்ணையின் பங்கு' என்று தூர்தர்ஷனில் நான் நேரடிக் கலந்துரையாடல் நிகழ்த்தியுள்ளேன். அன்று எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட, இன்று இந்த அருள் நிறைந்த வனாலயத்தில் பேசுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

அன்றைய காலத்தில் கோழிப்பண்ணை வைத்து கடுமையாக உழைத்தவர்கள் நாம்தான். நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தவும், அந்நியச் செலவாணியை ஈட்டவும் விவசாயிதான் நிலத்தில் வியர்வை சிந்தி உழைக்கிறான். இயற்கையோடு ஒன்றி விளைச்சல் செய்து மக்களுக்குக் கொடுக்கிறான். விவசாயி தான் உழைத்து உருவாக்கிய காய்கறி, தானியங்கள் என்று அனைத்திலும் நல்லவற்றை விற்றுவிட்டு, அதில் மீந்து போகும் காய்கறி, பழங்களை தனக்கும் தன் குடும்பத்திற்கும் கொடுக்கிறான். சொந்தமாக மாடுகள் இருந்தாலும் பாலை விற்பனைக்குக் கொடுத்துவிட்டு மீதமுள்ள பாலையே தன் வீட்டுக்கு எடுத்துப் போவான். அதுதான் நம் பழக்கமாக இருந்தது.

விவசாயி, தான் விளைவித்ததை மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறான். அவன் விலைக்குக் கொடுக்கிறான் என்றாலும், விவசாயியின் உழைப்புக்கு நம்மால் விலை கொடுக்க முடியாது. அன்றைக்கு நீர் இல்லாமல் விவசாயத்தை விட்டு கோழிப்பண்ணை போன்ற தொழிலுக்கு மாறினார்கள். இன்று நோய்களின் விளைவால் தொழிற்சாலைகளாக நிலங்கள் மாற்றப்படுகின்றன. விவசாயமற்ற பூமியில் லாபம் தரும் மரங்களை நட்டு வளர்க்க வேண்டும். இதனை வனம் இந்தியா அமைப்பு வெற்றிகரமாகச் செய்து வழிகாட்டுகிறது. இதுபோன்ற அமைப்புகளால்தான் கிராமப் பொருளாதாரம் மென்மேலும் வளர்ச்சி பெறும் என்று நம்புகிறேன். இனிவரும் காலங்களில் கிராமப் பொருளாதாரம் என்பது மரத்தைச் சார்ந்துதான் இருக்கும் என்ற சூழல் உருவாகிவிட்டது. அதற்கு நீங்கள் விதை ஊன்றி விட்டீர்கள். என் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறேன். ●





## வனாலயத்தில் பிரமிடு தியான அரங்கம்

# பொது நன்கொடைத் திட்டம்

நம் பல்லடம் பகுதியின் புறச்சூழலைப் பசுமையாக்கும் பணிகளை முன்னெடுத்து தீவிரமாக இயங்கி வருகிறது வனம் இந்தியா பவுண்டேஷன். கூடவே, மக்களின் அகச்சூழலைப் புனிதமாக்குவதற்காக பிரமிடு தியான அரங்கை வனாலயத்தில் நிறுவும் ஒரு பெரும் முயற்சியை இயற்கையின் கருணையோடும், மகான்களின் ஆசிகளோடும், உங்களது ஆதரவோடும் எடுக்கிறது.

இந்த பிரமிடு தியான அரங்கம் சமயச்சார்பு அற்றது. எந்த மார்க்கத்தைப் பின்பற்றுபவரும் இந்த பிரமிடு அரங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நம் பகுதியில் உள்ள ஆன்மிக அமைப்புகள், தன்னார்வலர்கள், தியானம் செய்ய விரும்பும் தனி நபர்கள், தொழிலதிபர்கள், பணியாளர்கள், இல்லத்தரசிகள், மாணவர்கள் என அனைத்து தரப்பினருக்கும் பயனளிக்க போகும் அதி உன்னதமான கட்டிடமே பிரமிடு தியான அரங்கம். நம் பகுதிக்கே பெரும் மாற்றத்தை அருள இருக்கிறது இந்த பிரமிடு தியான அரங்கம்.

வனாலயத்தில் இந்த பிரமிடு தியான அரங்கைப் போலவே கலையரங்கம், நாற்றுப் பண்ணை, இயற்கை உணவுக் கூடம், வாழ்வியல் ஆலோசனை மையம், குழந்தைகளுக்கான பாரம்பரிய விளையாட்டுத் தளம் போன்றவை உருவாக உள்ளன.

இதற்கெல்லாம் நாம் அனைவரும் பணமாக, பொருளாக, உழைப்பாக, ஆலோசனையாக என எவ்வாறெல்லாம் பங்களிக்க முடியுமோ, அவ்வாறெல்லாம் நம் பங்களிப்பைச் செலுத்துவோம். நாளைய பல்லடம் அமைதிப்பூங்காவாக உருவாக வனாலயமும், இங்கு அமையும் பிரமிடு தியான அரங்கமும் நிச்சயம் துணை புரியும்.

வங்கிக் கணக்கு:
Vanam India Foundation
Canara Bank, Palladam Branch
A/C No: 1213201007621
IFSC: CNRB0001213

நீங்கள் அளிக்கும் நன்கொடைக்கு 80ஜி பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு.
தொடர்புக்கு: 87540 36183





# உங்களால் வளரும் மரம்!

**வனாலயத்தில் மரக்கன்றுகள் நட்டு திருமண வாழ்வைத் தொடங்கும் தம்பதிகளுக்காக முகூர்த்தக்கால் நிகழ்ச்சி தமிழ் பண்பாட்டின் வழி நடைபெறுகிறது.**

09.02.2020 அன்று வித்ய விகாசினி பள்ளி தாளாளர் திரு. V.தர்மலிங்கம்–திருமதி.D.விஜயலட்சுமி தம்பதியரின் புதல்வர் திரு. D.V.நகுலன் பிரநவ் மற்றும் திரு. D.ஜெயகுமார்– திருமதி. N.பழனியம்மாள் தம்பதியரின் புதல்வி செல்வி.J.சப்னா ராகவி ஆகிய இருவருக்குமான திருமண வைபவத்தை முன்னிட்டு, முகூர்த்தக்கால் நிகழ்ச்சி நடைபெற்றது. வனம் அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் இணைந்து அவர்களை வாழ்த்தி மகிழ்ந்தனர். பின்னர் மணமக்கள் அவர்களது நட்சத்திரங்களுக்கு உரித்தான மரக்கன்றுகளை வனாலய வளாகத்தில் நட்டு மகிந்தனர்.

❖ திருமணம் செய்துகொள்ளும் மணமக்கள் அதற்கு முன்பாக முகூர்த்தக்கால் விழா நடத்தி சம்பிரதாயமாக மரம் நட்டால், அவர்களின் திருமண வாழ்வு போலவே அதுவும் வளரும்.

❖ தம்பதிகள் தங்கள் திருமண நாளில் மரம் நட்டு, தங்கள் இல்லறம் போலவே அது செழிப்பதைக் கண்டு மகிழ்வது மனதுக்கு நெகிழ்ச்சி தரும்.

❖ நம் குழந்தைகளின் பிறந்த நாளில் ஒரு மரக்கன்று நட்டால், அவர்களைப் போலவே அதுவும் வளரும்.

❖ நம் முன்னோர்களின் நினைவு நாளில் அவர்களின் ஞாபகார்த்தமாக மரக்கன்று நட்டால், அவர்கள் நம் கண் முன்னே உயிர்ப்புடன் இருப்பது போன்ற உணர்வு ஏற்படும்.

இதுபோல வாழ்வின் முக்கிய தினங்களில் வனாலயத்தில் மரக்கன்று நடுவதற்காக 'மரம் ஒரு வரம்' என்ற திட்டத்தை வனம் இந்தியா பவுண்டேஷன் அறிமுகம் செய்துள்ளது. நூற்றுக்கணக்கானவர்கள் இதில் இணைந்து மரம் நட்டிருக்கிறார்கள். ரூ.1,500 செலுத்தி மரக்கன்று நடலாம். இதை வனம் அமைப்பு மூன்று ஆண்டுகளுக்குப் பராமரிக்கும்.

உங்கள் பெயர் சொல்லும் மரத்தை எப்போது நடப் போகிறீர்கள்?


## மரம் ஒரு வரம்

**இணையத்தின் வழியே பசுமை முயற்சி**

பிறந்த நாள், திருமண நாள், முன்னோர்களின் நினைவு நாள் போன்ற உங்கள் வாழ்வின் முக்கிய தினங்களில் மரம் நட ஆசைப்படுகிறீர்களா? வனம் இந்தியா பவுண்டேஷன் Seed a Life என்ற இணையத்தின் வழியே மரக்கன்று நட்டு பசுமையைப் பரப்பும் நன்கொடைத் திட்டத்தை அறிமுகம் செய்கிறது.

**நீங்கள் உலகில் எங்கு இருந்தாலும், உங்களுக்காக மரம் நட்டு, மூன்று ஆண்டுகள் பராமரிப்பும் பாதுகாப்பும் அளிக்கிறோம்.**

நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான்... இந்த QR codeஐ scan செய்து இணையத்தின் மூலம் பசுமையை வளர்த்திடுங்கள்.

**வனம் இந்தியா பவுண்டேஷன்** 87540 36183 trustvanam@gmail.com




# வனம் நிகழ்வுகள்



**வ**னம் அமைப்பின் செயல்பாடுகள் கடல் கடந்தும் செல்கின்றன. 29.01.2020 அன்று சென்னையில் உள்ள சிங்கப்பூர் தூதரகத்தில் சிங்கப்பூர் தூதர் திரு. PONG KOK TIAN அவர்களை வனம் செயல் தலைவர் திரு. கே.பாலசுப்பிரமணியம், வனம் CSR இயக்குநர் திரு. முத்துசாமி IRS ஆகியோர் சந்தித்து வனம் அமைப்பின் செயல்பாடுகளை விளக்கினர். சிங்கப்பூரில் உள்ள National Park Board அமைப்புடன் இணைந்து நவீன மர வளர்ப்பு உத்திகளைத் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்வதாக சிங்கப்பூர் தூதர் உறுதி அளித்துள்ளார்.



**வ**னம் அமைப்பும் வெற்றி அறக்கட்டளையும் இணைந்து நடத்திய 'பெண்மையை போற்றுவோம்' 9வது கருத்தரங்கம் 31.01.2020 அன்று நமது வனாலயத்தில் நடைபெற்றது. தி சென்னை சில்க்ஸ் திருமதி. மீனாட்சி விநாயகம் அவர்கள் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். வனம் செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் அவர்கள் அறிமுகவுரை வழங்கினார். ஆதியகை மரபு விதை சேகரிப்பு மைய நிறுவனர் திரு. பரமேஸ்வரன் அவர்கள் சிறப்புரையாற்றினார். மாடித் தோட்டம் உருவாக்கும் முறை, உணவுக் கழிவுகள் மற்றும் வீட்டில் சேகரிக்கும் கழிவுகளைக் கொண்டு இயற்கை உரம் தயாரித்தல், நாட்டு விதைகள் மூலம் குறைந்த செலவில் ஆரோக்கியமான உணவு உற்பத்தி செய்தல் குறித்து அவர் விளக்கி கூறினார். மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் திரு. ராமகிருஷ்ணன் அவர்கள் நம் பாரம்பரிய உணவுமுறை மற்றும் வாழ்க்கை முறை பற்றி எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிகள் மற்றும் பெண்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

**ந**ல்லகவுண்டம்பாளையத்தில் உள்ள முத்துக்குமாரசாமிமலை திருக்கோயிலுக்கு சொந்தமான 9.93 ஏக்கர் அரசு நிலத்தில் வனம் அமைப்பின் சார்பாக அடர்வனம் அமைக்க உள்ளோம். இதற்காக முதற்கட்ட நிலச் சீரமைப்பு பணிகள் செய்ய, 01.02.2020 அன்று திருக்கோயில் அறநிலையத்துறை AE திரு.கந்தசாமி அவர்களை வனம் நிர்வாகிகள் சந்தித்து அனுமதி கோரினர். இதைத் தொடர்ந்து 10.02.2020 அன்று வனம் விரிவாக்கத் துறை இயக்குநர் திரு.K.M.ஈஸ்வரமூர்த்தி, வனம் செயலாளர் அவர்களின் உதவியாளர் திரு. B.பன்னீர்செல்வம் மற்றும் அறநிலையத்துறை AE திரு.கந்தசாமி அவர்கள் இந்த இடத்தை நில அளவை செய்து நில அளவைத் துறைக்கு ஆவணங்களை அளித்தனர்.



**வ**னாலயத்தில் 04.02.2020 அன்று நடைபெற்ற வாராந்திர கலந்தாய்வுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக பல்லடம் வட்டாட்சியர் திரு. D.சுப்ரமணியம் அவர்கள் கலந்துகொண்டார். புதிதாக கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் தங்களை அறிமுகம் செய்துகொண்டனர். வனம் உறுப்பினர்கள், கடந்த வார கள அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். வனம் செயலாளர் அவர்கள், திட்டங்கள் குறித்து விவாதித்தார். அன்னபாலி வழங்கிய MKT தங்கவேல், சுமித்ரா தேவி அவர்களைப் பாராட்டி கூட்டம் நிறைவுபெற்றது.

**வ**னம் அமைப்பின் செயல் தலைவர் திரு. கே.பாலசுப்பிரமணியம் அவர்கள் 10.02.2020 அன்று ஹூண்டாய் நிர்வாக இயக்குநர் திரு. யங் ஜின் அங் மற்றும் சன்மார் குழுமம் தலைவர் திரு. கே.ராஜேந்திரன் ஆகியோரை சந்தித்து வனம் அமைப்பின் செயல்பாடுகள் பற்றி விளக்கினார்.



**வ**னாலயத்தில் 11.02.2020 அன்று வாராந்திர கலாந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. டேராடூன் Indian Forest Research Institute முதல்வர் முனைவர் எஸ்.அசோக்குமார், IFFCO-State Marketing Manager திரு. சி.ஜெயராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு, தங்கள் அனுபவங்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர். வனம் உறுப்பினர்கள், கடந்த வார பணிகள் பற்றி பகிர்ந்துகொண்டனர். வனம் செயலாளர் அவர்கள் பசுமைப் பயணம் குறித்தும், திட்டப்பணிகள் குறித்தும் உரையாடினார். அன்னபாலி வழங்கிய செம்மிபாளையம் திருமதி. விஜயலெட்சுமி அவர்களை வாழ்த்தி கூட்டம் நிறைவடைந்தது.

**ந**மது வனாலயத்தில் 5S ஆலோசகர் திரு.விஜயபாபு அவர்கள் தலைமையில் 5S பயிற்சி வகுப்பு 11.02.2020 அன்று நடைபெற்றது. வனம் செயலாளர் அவர்கள் இதனைத் தொடங்கி வைத்தார். வனம் நிர்வாகிகள் மற்றும் அலுவலர்கள் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டனர்.





**டே**ராடூன் Indian Forest Research Institute முதல்வர் முனைவர் எஸ்.அசோக்குமார், IFFCO State Marketing Manager திரு. சி.ஜெயராஜ், வனம் பெருநிறுவனத் தொடர்பு இயக்குநர் IFFCO OVR.ராமச்சந்திரன், விரிவாக்க இயக்குநர் திரு. K.M.ஈஸ்வரமூர்த்தி, மனித வள இயக்குநர் திரு. S.V.நடராஜ் மற்றும் வனம் செயலாளரின் உதவியாளர் திரு. B.பன்னீர்செல்வம் ஆகியோர் 11.02.2020 அன்று வரக்குட்டபாளையத்தில் 12 ஏக்கரில் நடப்பட்டுள்ள 1,600 வேப்பமரக் கன்றுகளை ஆய்வு செய்தனர்.





**ந**மது வனம் திட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்கள் 14.02.2020 அன்று குங்குமப்பாளையம் பிரிவு ஒயிட் க்ளவுட் பள்ளி சாலையிலும், 15.02.2020 அன்று சித்தம்பாளையம் திட்டப் பகுதியிலும் மரக்கன்றுகளையும், களைகள் அகற்றும் பணியையும் கள ஆய்வு செய்தார்.

**வ**னம் அமைப்பின் செயல் தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் முன்னிலையில் 17.02.2020 அன்று, ஸ்ரீமேகலா கியர் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனர் திரு. ஜெயக்குமார் அவர்கள் வனம் அறங்காவலராக தன்னை இணைத்துக்கொண்டார்.

வனம்
நிகழ்வுகள்





**வ**னம் அமைப்பின் செயல் தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் முன்னிலையில் 17.02.2020 அன்று, ஜெயசந்திரா பியரிங்ஸ் பிரைவேட் லிமிடெட் இயக்குநர்கள் திரு. ஜெயக்குமார் மற்றும் திருமதி. காந்தி ஜெயகுமார் ஆகியோர் வனம் அறங்காவலராக தங்களை இணைத்துக்கொண்டனர்.

**வ**னம் அமைப்பின் செயல் தலைவர் மற்றும் பொருளாளர் ஆகியோர் முன்னிலையில் 17.02.2020 அன்று, பைன் புராடக்ட் நிறுவனர் திரு. பாலசுப்பிரமணியம் மற்றும் அவர் புதல்வர் திரு. பி.கௌதம் ஆகியோர் வனம் அறங்காவலராக தங்களை இணைத்துக்கொண்டனர்.





# குஜராத் பசுமைப் பயணம்!

சுற்றுச்சூழல், மரம் வளர்ப்பு, இயற்கை விவசாயம், விவசாய விளைபொருள் மதிப்பு கூட்டும் தொழில்கள் போன்றவற்றில் பல்வேறு பகுதிகளில் இருக்கும் நடைமுறைகளைக் கற்று வருவதற்காக வனம் அமைப்பு சார்பில் பசுமைப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

14.02.2020 முதல் 19.02.2020 வரை வனம் அமைப்பின் நிர்வாகிகள், இயக்குனர்கள், உறுப்பினர்கள் என 53 பேர் திரு. அசோக்குமார் மேத்தா அவர்களின் துணையுடன் குஜராத் பசுமைப் பயணம் மேற்கொண்டனர்.

இந்தப் பயணத்தில், பாவாபுரியிலுள்ள கோசாலை, பிரம்மகுமாரிகள் ஆசிரமம், மவுண்ட் அபு, டில்வாரா மற்றும் அம்பாஜி கோயில், அக்சர்தாம் கோயில், மகாத்மா காந்தியின் சபர்மதி ஆசிரமம், ஆனந்தில் உள்ள இந்தியாவின் மிகப்பெரிய பால் பண்ணை, அமுல் சாக்லெட் மற்றும் பால் உணவுப் பொருட்கள் தயாரிப்புத் தொழிற்சாலை, சர்தார் சரோவர் அணை, உலகின் மிகப்பெரிய சர்தார் வல்லபாய் படேல் சிலை மற்றும் அகமதாபாத் காந்தி ஆசிரமம் போன்ற முக்கியமான இடங்களைப் பார்வையிட்டுத் திரும்பினர்.





Vanam India Foundation,
Vanalayam, SF No:1/3, Tiruchy Main Road, Kalivelampatti Post, KSN Puram, Opp.to Kongu Kalyana Mandapam,
Palladam - 641662, Tirupur District. email: trustvanam@gmail.com, Mobile:87540 36183.